# தகவல் பரிமாற்றமும் பொது அறிவும் (மூன்று முதல் ஐந்து வயதுவரையும்)

தகவல் பரிமாற்றம் என்பது பேசுதல் உற்றுக்கேட்டல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கின்றது. அது தேவைகளை தெளிவாக எடுத்துக்கூறுதல் மற்றும் மற்றவர்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றலாகும்.

**பொது அறிவு என்பது** வெளியுலகத்தில் இருக்கிற அக்கறையாகும்.

நன்றாகத் தகவல் பரிமாற்றம் செய்யும் குழந்தைகளும், தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி அறிய ஆர்வமிக்க குழந்தைகளும் பள்ளியிலும் வாழ்க்கை முழுதிலும் நன்கு செயல் படத் தயராக உள்ள குழந்தைகளாகும்.

**நல்ல தகவல் பரிமாற்றமும், பொது அறிவும் இருக்கின்ற பள்ளி முன் பருவ வயதினர், பின் வருவனவற்றைச் செய்வார்கள்::**

- கதைகள் சொல்வார்கள்
- கற்பனை விளையாட்டை உபயோகிப்பார்கள்(கடற் கொள்ளையர் போலப் பாவனை செய்வார்கள் அல்லது ஒரு தொகுதி ஒரு கோபுரம் என மனக் கண்ணால் காண்பார்கள)
- ஏதாயினும் ஒன்றைச் செய்யும் படி கேட்டால் அதைப் புரிந்து கொள்வார்கள்.
- குழந்தைகள், அவர்களுடைய தேவைகளை, வயதுவந்தோர் எளிதில் புரிந்து கொள்ளும் வழியில் தெரிவிப்பார்கள்

**உங்கள் குழந்தைகள், அவர்களுடைய தொடர்பு கொள்ளும் திறன்களையும் பொது அறிவையும் விருத்தி செய்ய உதவும் வழிகள்:**

- உங்கள் குழந்தை பேசும்போது இடைமறிக்காமல் உற்றுக் கேளுங்கள்

- **உங்கள் குழந்தையிடம் அவருடைய நாளைப் பற்றிக்கேளுங்கள் –** இன்று உனது நாள் நன்றாக இருந்ததா எனக் கேட்பதிலும் பார்க்க வெளியே என்ன செய்தீர்கள் என்ற திறந்த முனையுடைய கேள்விகளைக் கேளுங்கள். அப்படியான கேள்விக்கு உங்கள் குழந்தை ஆம் இல்லை என்ற பதிலளிக்காமல் விவரமாகப் பதிலளிப்பாகள்.

- **உங்கள் குழந்தைகள் ஏராளமான வினாக்களைக் கேட்க அனுமதியுங்கள் –** உங்கள் குழந்தை ஏராளமான வினாக்களைக் கேட்டால், அதன் பொருள் என்னவென்றால் உலக நடப்புகள் பற்றி அறிய ஆர்வமுடையவர்கள் என்பது தான்.அவர்கள் உங்களிடம் கேட்கிறார்கள் ஏனென்றால் அவர்கள ் கேட்பதை நீங்கள் கொடுப்பீர்கள் என நம்புகிறார்கள்

- **உணர்ச்சிகளைப் பற்றிப் பேசுங்கள்–** ‘உங்களை என்ன மனச் சோர்வுறச் செய்கிறது?’ எனக்கேளுங்கள். ஒன்று சேர்ந்து புத்தகம் வாசிக்கும் போது, அந்தப் புத்தகத்திலுள்ள நபர் அல்லது கதாப்பாத்திரம் எப்படி உணரக்கூடும் என்றும் அவருக்கு என்ன தேவைப்படும் என்றும் கூறுங்கள்

- **உங்கள் குழந்தையுடன் இணைந்து வாசியுங்கள்** அத்துடன் நீங்கள் வாசித்த புத்தகங்களைப் பற்றிப் பேசுங்கள் அனுபவங்கள் எண்ணங்கள் மற்றும் புத்தகங்களுக்கு இடையில் தொடர்பை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள்.எடுத்துக்காட்டு அவர்கள் வெஜிமைட் இடையிட்டு ரொட்டி சாப்பிடுகிறார்கள். பொசும்மஜிக் என்ற புத்தகத்தில் இருப்பது போல

அவர்களும் கண்ணுக்குத் தெரியாமல் போய்விடுவார்களோ என அதிசயப்படுங்கள்.

- **ஒன்று சேர்ந்து பாட்டுகள் பாடுங்கள்,** ஒலி இயைபுச் சொற்களையும் சிறுபிள்ளைத்தனமான நகைச்சுவைகளையும் உருவாக்குங்கள்.

- **பாசாங்கு செய்யும் கற்பனையுள்ள விளையாட்டுகளை விளையாடுங்கள்–** வேறு ஒருவரைப் போலத் தோற்றம் தர அல்லது காட்சியளிக்க வேண்டி தனிவகை ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள் அல்லது வீட்டிலுள்ள பொருள்களைப் பாவியுங்கள். குழந்தைகள் பல பொம்மைகளுடன் அல்லது பல விதமான பொருள்களுடன் விளையாட அனுமதியுங்கள் (மணிகள், களிமண், இலைகள், முனைகள், நிலத்தொகுதிகள்)

- **உங்கள் குழந்தையை ஊக்குவியுங்கள்-** உங்கள் குழந்தையின் முயற்சிகளுக்கு நீங்கள் வழங்கும் நேர்முறையான பாராட்டுகள், அவர்கள் தகவல் பரிமாற்றத்தைக் கற்றுக் கொள்ள உதவி செய்யும். அவர்கள் தவறு செய்யும்போது, ஏளனம் செய்தல் தொடர்ந்து முயற்சி செய்வதற்கு ஊக்கமளிக்காது.

- **உங்கள் குழந்தைக்கு முக்கியமான பொருட்களைப் பற்றி அறிந்திருங்கள் -** அவர்களுடைய நண்பர்கள், விருப்பமான பொம்மைகள், திரைப்படங்கள் அல்லது புத்தகங்கள் ஆகியவற்றைப் பற்றி கேளுங்கள்.

- **அனுபவங்களை வழங்குங்கள் -** ஒன்றாக பொருள் வாங்கல், நூலகத்துக்கு அல்லது பூங்காவுக்குச் செல்லுதல் அல்லது ஓவியம்வரைதல் ஆகியவைகள் தொடர்பால் திறன்களையும், பொது அறிவையும் விருத்தி செய்யக் கிடைக்கும் வாய்ப்புகளாகும்.

- **குடும்பமாக ஒன்று சேர்ந்து இரவு உணவை உண்ணுங்கள் –** இந்தச் சந்திப்பு எல்லாக் குடும்ப உறுப்பினர்களுக்கும் தங்களுடைய செயற்பாடுகளைப் பற்றிக் கலந்துரையாடக் கிடைக்கும் வாய்ப்பாகும். வயது வந்தவர்களுடைய கலந்துரையாடலில் உங்கள் குழந்தைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்

- **தொலைக்காட்சி, கணனி மற்றும் நிகழ்பட விளையாட்டுகள் மீது எல்லை வையுங்கள் -** இந்த ஏற்பாடு, உங்கள் குழந்தைகள் பேசுவதற்கு உண்மையான அனுபவங்களை வழங்கும். கணனியைப் பாவித்தல், தொலைக்காட்சி அல்லது இலக்கமுறை தகவல் வட்டுகளைக் கண்காணித்தல் ஆகியன கல்வி சார்ந்தவைகளாகயிருந்தாலும், குழந்தை தனது தொடர்புத்திறனை மேம்படுத்த உதவி செய்யாது.

- **குழந்தைகள் வெவ்வேறான ஆட்களிடமிருந்து வித்தியாசமான பண்புகளைக் கற்றுக் கொள்கிறார்கள் –** ஆகையால் நண்பர்களைப் பார்க்கச் செல்லுங்கள் அத்துடன் ஏனைய பெற்றோர்களை உட்கொண்ட குடும்ப சந்திப்புகளுக்குச் செல்லுங்கள். மழலையர் பள்ளிக்குச் செல்லுங்கள்
- **ஒரு குழந்தையை வளர்த்து உருவாக்க கிராம மக்களின் சேவை தேவை –** ஆகையால் உங்கள் நூலகத்தில் நடைபெறும் கதை சொல்லும் நேரம், பூங்காக்கள், அரும்காட்சியங்கள், நீச்சல் குளங்கள், முற்பள்ளி ஆகிய சமூக சேவைகளைப் பயன்படுத்துங்கள்.

- **உங்கள் குழந்தை வசதி படைத்த கற்கும் சூழ்நிலையைப் பெறுவதற்கு நீங்கள் பணக்காரராக யிருக்க வேண்டிய அவசியமில்லை.** நூலகங்களிலிருந்து பொம்மைகளையும் புத்தகங்களையும் இரவல் வாங்கலாம். உங்கள் சமூகத்தில் பெரும்பாலும் இலவசமான குழந்தைகளுக்கான பொதுநிகழ்ச்சிகள் நடைபெறும் - இவற்றைப்பற்றி அறிவதற்கு உங்கள் உள்ளுருக்குரிய பத்திரிகைகளைப் பாருங்கள்

- **உங்கள் குழந்தைகளுடன் உங்களுக்கு மன அமைதியை அளிக்கிற மொழியில் பேசுங்கள்.** இந்தக் கலந்துரையாடல் உங்கள் குழந்தை ஒரு மொழியை நன்கு கற்பதை உறுதிப் படுத்தும் உங்கள் குழந்தையை முன்பள்ளி அல்லது குழந்தை பராமரிப்பு நிலையத்தில் சேர்த்துக் கொள்வதன் மூலம் அவர்கள் பள்ளிக்குச் செல்ல முன்பே ஆங்கிலம் கற்க உதவி செய்யுங்கள்

  **உங்கள் குழந்தையுடன் இந்த ஆர்வத்தைத் தூண்டுகிற நேரத்தை அனுபவியுங்கள்**



